# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 19.10.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று மீண்டும் நான் உங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் மஜ்லிஸ்களுக்கு அழைத்துச் செல்வேன். அவர்களது அறிவிப்புகளை எடுத்துரைக்கின்றேன். இந்த அறிவிப்புகள் அவர்களது ஈமான் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மஜ்லிஸ்களின் தனித்தன்மையை படம்பிடித்துக் காட்டுகிறது.

**ஹஸ்ரத் ஹுஸைன் அலி சா சாஹிபின் மகன் ஹஸ்ரத் வலாயத் சா சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே கிடைத்தன. ஏனென்றால் நான் பணிபுரிகின்ற இடத்தில் எனக்கு மிகக் குறைவான விடுப்புகளே கிடைத்தன. நான் கனவின் அடிப்படையில் பைஅத் செய்தேன். அது இதுவாகும். ஹெட்வொர்த் மார்த்துபூர் – இங்கிருந்துதான் ஹெட்பாரி துஆப் நதி பாய்கிறது. நான் அங்கு நிர்ணயிக்கப்பட்டேன். அரசாங்க விடுதிகளின் சுவரின் மீது நான் உறங்கிக் கொண்டிருந்தேன். ஒரு ஜமாஅத் மிகவும் நன்னடத்தை கொண்ட மக்களைக் கொண்டிருந்தது. அதற்கு முன்பாக மிகவும் அழகிய தோற்றத்தைக் கொண்ட – அழகிய ஆடை அணிந்த – கண்களால் பார்க்க முடியாத அளவுக்கு ஒளிதரக்கூடிய கீரிடத்தை தலையில் அணிந்தவாறு எனது மாடியில் ஏறியிருந்தார். ஒரு மக்கள் கூட்டம் ஊர்வலமாக சென்றது. அதனை வழிநடத்திச் சென்ற அந்தப் பெரியவர் சுவரின் மீது ஏறிச் சென்றார். அங்கு எக்காளம் மூலமாக பாங்கு சொல்லப்பட்டது. அதன் சப்தம் வெகு தூரம் வரை சென்றது. இதற்குப் பிறகு அவர்கள் தொழுவது போன்று தோன்றியது. அதன் பின்னர் திரும்பி அதே சுவர் வழியாக வந்தார்கள்.

கனவில் கண்ட காட்சியைப் பற்றி கூறுகின்றார்கள்: எனது கட்டிலுக்கு அருகில் சென்ற போது, என்னை நோக்கி கூறினார். சகோதரரே! இந்த அசுத்தத்தை உள்ளேயிருந்து வெளியே போட்டு விடுங்கள். அதாவது அந்த அசிங்கத்தை அந்த அழுக்கை உள்ளேயிருந்து அகற்றி விடுங்கள். நான் கனவிலேயே மிகவும் நல்லது ஜனாப் எனக் கூறினேன். அந்த பெரியவர் என்னைக் கடந்து முன்னால் சென்ற போது நான் அவருக்கு பின்னால் இருந்த நண்பரிடம் இந்த பெரியவர் யார்? என விசாரித்தேன். அவர்களில் ஒருவர் உங்களுக்கு தெரியாதா? எனக் கேட்டார். இவர் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் ஆவார் என்றார். இதே நாள் அதிகாலை ஃபஜ்ர் வேளையில் எனது நண்பர் மர்ஹூம் டாக்டர் முஹம்மது இஸ்மாயீல் கான் சாஹிப் எனது வீட்டின் கதவைத் தட்டினார். நான் வெளியே வந்த போது, இஸ்மாயீல் சாஹிப் அவர்கள், நீங்கள் அஹ்மதியாகி விட்டீர்கள் என்றார். நான் எவ்வாறு? எனக்கேட்டேன். அவர் கூறினார். இன்றிரவு எனக்கு கனவு வந்தது. நீங்கள் எனது மருத்துவமனைக்கு வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள். நான் உள்ளே சென்று எனது பெட்டியைத் திறந்து ஒரு சிறந்த அழகான ஒரு மேலங்கியை எடுத்து உங்களுக்கு அணிவித்தேன். அது உங்களது உடலுக்கு மிகவும் பொருத்தமானதாக இருந்தது. இதற்குப் பிறகு நான் மிகவும் அழகிய, சிறந்த பொத்தான்களை கொண்டு வந்து அந்த மேலங்கியில் பொருத்தினேன். இவருக்கு மட்டும் இந்தக் கனவு வரவில்லை. மாறாக, இவரது அஹ்மதி நண்பருக்கும், அவருக்கும் அல்லாஹ் கனவின் மூலமாக சைகையாக அஹ்மதிய்யத்தின் பக்கம் ஈர்ப்பை ஏற்படுத்தினான். அல்லது அஹ்மதி ஆகிவிடுவார் என்பதனை தெரிவித்திருந்தான். ஏனென்றால் இவர் நல்ல இயல்புடையவர் ஆவார்.

எவ்வாறிருப்பினும், இவர் கூறுகின்றார்: இதற்கு சில காலத்திற்குப் பிறகு நான் எனது மாமனார் வீடு மர்ஹூம் செய்யது அக்பர் சா சாஹிப் உடைய வீட்டிற்கு வந்தேன். மர்ஹூம் மிர்ஸா குலாமுல்லாஹ் சாஹிப்

அண்டை வீட்டுக்காரராக இருந்தார். எனது அருகில் வந்தார். அது வெள்ளிக்கிழமையாக இருந்தது. நான் அவருடன் மஸ்ஜித் அக்ஸா சென்றேன். அங்கு அவர் மெம்பர் அருகில் என்னை உட்கார வைத்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தபோது, அவர் ஹுஸூரிடம் என்னைப் பற்றி பைஅத் செய்வதைக் குறித்து கூறினார். ஹுஸூர் மிகவும் கருணையுடன் எனது கையை தனது கையுடன் பிடித்துக் கொண்டார்கள். பைஅத் செய்யக்கூடிய மற்றவர்கள் எனது தோளின் மீது கை வைத்து பைஅத் செய்தார்கள்.

**இதனைப் போன்று பைஅத்தின் சம்பவம் ஹஸ்ரத் இனாயத்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் 1901 –ல் பைஅத் செய்தேன். அப்போது எனது வயது ஏறக்குறைய 15 ஆகும். நான் முதன்முறையாக காதியான் வந்த போது, ஒரு அத்தர் பாட்டிலை உடன் கொண்டு வந்திருந்தேன். நடந்தே வந்தேன். இரவு பட்டாலாவில் தங்கினேன். பிறகு பாட்டிலைப் பார்த்த போது, ஒரு துளியைத் தவிர மற்றவை வீணாகி விட்டன. எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. மாலை நேர தொழுகை வேளையில் ஹுஸூர் அவர்கள் மஸ்ஜிது முபாரக் உடைய மாடிக்கு வந்த போது முஸாபா செய்தேன். பிறகு ஒருவர் ஹுஸூர் அவர்களின் உடம்பை அமுக்கி விட்டார்கள். நான் ஒரு பாட்டில் அத்தர் கொண்டு வந்தேன். அவை வழியில் வீணாகி விட்டன என்றேன். பாட்டிலை ஹுஸூரிடம் கொடுத்தேன். உமக்கு முழு பாட்டிலுக்குரிய நன்மை கிடைத்து விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த பாட்டிலில் எஞ்சியிருந்த ஒன்றிரண்டு சொட்டு அத்தரை ஏற்றுக் கொண்டார்கள். உமது எண்ணம் அன்பளிப்பு வழங்குவதாக இருந்தது. உடனே முழு பாட்டிலுக்குரிய நன்மை கிடைத்து விட்டது என்றார்கள். கூறுகின்றார்கள்: தொழுகைக்குப் பிறகு பைஅத் செய்தேன். அப்போது 10 நபர்கள் வரை அங்கிருந்தனர்.

பிறகு எழுதுகின்றார்கள்: ஒருமுறை நடந்தது. காதியானிலிருந்து திரும்பிய போது பட்டாலா வந்தடைந்தேன். ஒரு நபர் என்னுடன் இருந்தார். இரவில் பட்டாலாவில் தங்கினேன். அந்த நபர் நீங்கள் ஹஸ்ரத் சாஹிபிடம் அனுமதி வாங்கினீர்களா? எனக் கேட்டார். நான் இல்லை எனக் கூறினேன். அனுமதி பெற்று வரவில்லை என்பதால் எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

அவர் கூறுகின்றார்: இரவில் கனவில் கண்டேன். ஹுஸூர் அவர்கள் கட்டிலில் உட்கார்ந்து ரொட்டி சாப்பிடுகிறார்கள். என்னையும் சாப்பிடும்படி கட்டளையிட்டார்கள். பாதியை ஹுஸூர் அவர்கள் சாப்பிடடார்கள். மீதியை நான் சாப்பிட்டேன். ஹுஸூர் அவர்கள், நீங்கள் செல்லலாம் என்று அனுமதி வழங்கினார்கள். நான் ஒன்றும் படிக்காத மனிதர் ஆவேன். எனது பேச்சிலும் திக்கல் இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆ மற்றும் பார்வையின் பரக்கத்தால் தற்போது நான் முற்றிலும் சரியாகி விட்டேன்.

**ஹஸ்ரத் சேக் அதாவுல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஒருநாள் நான், பாபு ஃபக்ருத்தீன் கடையிலிருந்த வட்ட அறையின் அருகில் நின்றிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தானாகவே மஸ்ஜிது முபாரக்கின் கதவருகே வந்தார்கள். மேலும் அனேன்னை அழைத்தார்கள். மியான் அதாவுல்லாஹ் இந்த கடிதத்தை தபால் பெட்டியில் போட்டு விடுங்கள் என்றார்கள். நான் என்னுடைய பெயர் ஹுஸூருக்கு நன்றாக தெரிந்திருக்கிறதே என மகிழ்ச்சியடைந்தேன். மக்ரிப் வேளையில் ஹுஸூர் அவர்கள் ஒரு சாதாரண டம்ளரில் தினமும் ஆட்டுப்பாலை பச்சையாக குடித்து வந்தார்கள். ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பச்சைப்பாலை குடிக்காதீர்கள் என்றார்கள். அதற்கு அன்னார், பெரும்பாலான நபிமார்கள் பச்சைப் பாலைய அருந்தி வந்திருக்கின்றார்கள் என்றார்கள்.

சில காலத்திற்குப் பிறகு, நான் தந்தி அலுவலகத்தில் பணியாளராக இருந்த போது எனக்கு மிகவும் அதிகமாக காய்ச்சல் வந்தது. நீண்ட நாள் காசநோயினால் பாதிக்கப்பட்டிருந்தேன். விடுப்பு எடுத்து காதியான் சென்றேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்களுடன் தங்கினேன். ஏனென்றால் அவர்கள் மூலமாகத்தான் நான் ஜம்முவில் முஸ்லிம் ஆனேன். இந்த ஆன்மீக மற்றும் நெருங்கிய தொடர்பின் காரணமாக முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எனக்கு சிகிச்சை அளிக்க ஆரம்பித்தார்கள். எனக்கு

அதிகாலையில் அரிசி கஞ்சி மற்றும் அவித்த முட்டை ஒன்றை சாப்பிடக் கொடுத்து, பிறகு மருந்து கொடுப்பார்கள். இதுபோன்றவற்றை சாப்பிடுவது இவருக்கு பழக்கம் இல்லாமல் இருந்தது; நாக்கின் சுவை கெட்டுப்போனது.

ஒருநாள் மாலையில் நான் மதிப்பிற்குரிய அம்மா ஜான், ஹஸ்ரத் அப்துல் ஸலாமுடைய தாயாராகிய முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது துணைவியாரிடம் எனது நாவின் சுவை மோசமானதாக இருக்கிறது. கொஞ்சம் குழம்பு அல்லது உப்பான ஏதாவது பொருள் இருந்தால் சரியாகி விடும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்தேன். அவர்கள் மவ்லவி சாஹிப் கோபம் அடைவார்கள் என்றார்கள். இருந்தபோதிலும் ஒரு துணியில் சமைத்த குழம்பை வடிகட்டி அதனை குடிக்கக் கொடுத்தார்கள்.

கூறுகின்றார்கள்: மறுநாள் காலையில் மவ்லவி சாஹிப் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எனது நாடித்துடிப்பை பார்த்தார்கள். இரவு என்ன சாப்பிட்டீர்கள் எனக் கேட்டார்கள். (தற்போது, பெரிய பெரிய பரிசோதனைகளை எடுத்தபோதிலும் மருத்துவர்களுக்கு சரியாக தெரிவதில்லை.) ஆனால் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நாடித்துடிப்பைப் பார்த்து இரவில் என்ன சாப்பிட்டீர்கள்; நாடித்துடிப்பு மிகவும் வேகமாக துடிக்கிறது என்றார்கள். நான் ஒன்றும் இல்லையெனக் கூறினேன். அன்னார் தர்ஸை விட்டு விட்டு மிக வேகமாக வீட்டிற்குச் சென்றார்களா. தனது மனைவியிடம் இரவில் அதாவுல்லாஹ் என்ன சாப்பிட்டார்? என விசாரித்தார்கள். அதற்கு அவர்கள், அவர் உணவு உண்ட பிறகு கொஞ்சம் குழம்பு குடித்தார் எனக் கூறினார்கள். எனவே இவர்கள் மீதும், என் மீதும் கோபமடைந்தார்கள். நீங்கள் இந்த அளவு ஏமாற்றி விட்டீர்கள்; பொய் கூறி விட்டீர்கள் என்றார்கள். மவ்லவி சாஹிப் எனது இந்தப் பொய்யைப் பற்றியும் பத்திய உணவு பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் எடுத்துரைத்து, இவருக்கு தனது ஆரோக்கியம் பற்றி சிறிதும் கவலையில்லை எனக் கூறினார்கள். இவர் டி.பி. நோயாளி ஆவார் என்றார்கள். நான் நோயின் காரணமாக மிகவும் பலவீனம் ஆனேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த விசயத்தினால் மிகவும் கோபமடைந்தார்கள். கூறுகின்றார்கள்: இறுதியில் எனது இரண்டு மாத விடுப்பு முடிந்தது. ஹஸ்ரத் மவ்லவி சாஹிபிற்கு, எனது ஆரோக்கியத்தைப் பற்றி மிகவும் கவலை இருந்தது. நான் உபயோகிப்பதற்காக மருந்துகளை தயாரித்து எனக்கு கொடுத்தார்கள். நான் துஆவும் செய்வேன் என்றார்கள்.

ஹுஸூரிடம் சென்று எனது விடுப்பு முடிந்து விட்டது. எனவே ராவல்பிண்டி திரும்பிச் செல்கின்றேன் என்றேன். உடல்நிலை சரியில்லை. துஆ செய்யுங்கள் என்றேன். ஹுஸூர் துஆ செய்தார்கள். மேலும் கூறினார்கள்: நீங்கள் தொழுகைகளில் மிகவும் தன்னடக்கத்துடனும், உருக்கத்துடனும் துஆ செய்து வாருங்கள். காதியானுக்கு கடிதம் எழுதி வாருங்கள். அடிக்கடி காதியான் வாருங்கள். பிறகு கூறினார்கள்: பத்தியத்தை கடைபிடிக்காமல் இருக்காதீர்கள். ஹுஸூருக்கு இவர் உணவில் பத்தியத்தை கடைபிடிக்காமல் இருந்த விசயம் நினைவில் இருந்தது. அல்லாஹ்விடம் உறுதியான வாக்குறுதி செய்யுங்கள். அல்லாஹ் கஃபூருர் ரஹீம் ஆவான். இன்சா அல்லாஹ் கண்டிப்பாக ஆரோக்கியத்தை வழங்குவான்.

கூறுகின்றார்: நான் ராவல்பிண்டி திரும்பிச் சென்றதும், இரவு ஒன்றரை மணியளவில் ஒரு கனவு மாற்று மொழியில் தென்பட்டது. அதனை என்னால் புரிய முடியவில்லை. ஆச்சரியப்பட்டவாறு இறைவனது சன்னதியில் விழுந்தேன். இறைவா! நீ அனைத்து மொழிகளின் மீதும் வல்லமை கொண்டவனாவாய். எனக்கு இந்த கனவின் கருத்தைப் புரிய வைப்பாயாக! என வேண்டினேன். இறைவன் தனது சிறப்பான அருளை வழங்கியவாறு இரவு இரண்டரை மணி அளவில் எனது நாவில் ஹெல்தி, ஹெல்தி, ஹெல்தி என வெளிப்படுத்தினான். இவ்வாறு ஆரோக்கியம், ஆரோக்கியம் என்று பலமுறை கூறப்பட்ட சப்தம் என்னை விழிக்கச் செய்தது. இதனைக் கூறி தற்போது வரை ஏறக்குறைய 20 வருடங்கள் ஆகி விட்டன. ஒருபோதும் தலைவலியினால் கூட நான் நோயாளி ஆனதில்லை. அல்லாஹ்வின் மற்ற உதவியினால் ஒவ்வொரு விசயத்திலும் எப்படிப்பட்ட பொருட்கள் ஏற்பாடு செய்யப்பட்டதென்றால், முதலில் பிள்ளைகள் கிடையாது. பிள்ளைகள் பிறக்க ஆரம்பித்தன. பிறகு அல்லாஹ்வின் அருளால் 3 மகள்களும் 4 மகன்களும் வழங்கப்பட்டன.

**அடுத்து ஒரு சஹாபி மலிக் நியாஸ் முஹம்மது சாஹிப் உடைய மகன் ஹஸ்ரத் மலிக் பரக்கத்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

எனது தந்தை மலக் பரக்கத் அலி சாஹிப் 1897-98 முதல் அஹ்மதியாக இருந்தார்கள். நானும் அவர்களைப் பின்பற்றியவாறு சிறு வயதிலிருந்தே அஹ்மதி ஆவேன். 1904 -ல் எனது வயது ஏறக்குறைய 14 அல்லது 15 ஆக இருந்தது. நான் ஹுஸுர் அவர்களிடம் பைஅத் செய்துள்ளேன். ஹுஸுரிடம் யாராவது பைஅத் செய்தால், நாங்களும் மீண்டும் மீண்டும் பைஅத் செய்து வந்தோம். ஏனென்றால் ஹுஸுர் அவர்கள் பைஅத்திற்குப் பிறகு செய்யக்கூடிய துஆவில் கலந்து கொள்பவராக வேண்டும் என்பதனாலாகும். சில தடவை பெருமளவில் மக்கள் பைஅத் செய்வார்கள். மக்கள் தனது தலைப்பாகையை கழற்றி ஹுஸுரின் கை வரை சென்றடையச் செய்தார்கள். அந்த தலைப்பாகையை மக்கள் அனைவரும் பிடித்துக் கொள்வார்கள். இவ்வாறு பைஅத் நடைபெற்றது.

**ஹஸ்ரத் டாக்டர் உமர்தீன் சாஹிபின் அறிவிப்பு உள்ளது. கூறுகின்றார்கள்:**

நான் ஜுலை 28, 1879 -ல் பிறந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஜுன் 30, 1905-ல் பைஅத் செய்தேன். ஜுலை 23, 1928 -ல் வஸிய்யத் செய்தேன். பிறகு தனது வஸிய்யத் எண் 2898 யையும் எழுதியுள்ளார். நான் நைரோபியில் இரண்டு வருடங்கள் சதர் ஆகவும், பின்னர் பொறுப்பாளராகவும் இருந்தேன். பிறகு நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்தேன். இதைப் போன்று ஜமாஅத் அஹ்மதிய்யா நைரோபியின் மூஸி ஆக 15 வருடங்கள் இருநதேன். மூன்று வருடங்கள் வரை வஸாயா ஸியாபத் செயலராகவும் இருந்தேன். பிப்ரவரி 1900 -ல் இந்த நாட்டிற்கு டாக்டர் ரஹ்மத் அலி சாஹிப் (ரலி), சூஃபி நபி பக்ஷ் சாஹிப் கணக்கர் மற்றும் டாக்டர் பஸாரத் சாஹிபின் காலத்தில் வந்தேன். டாக்டர் ரஹ்மத் அலி சாஹிபின் சிறந்த நல்லொழுக்கம், கருணை மற்றும் அனுதாபத்தைக் கண்டு மக்கள் பெரும்பாலார் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதைக் கண்டேன். இதுதான் எனது முதல் சந்தர்ப்பம் ஆகும். காலத்து வழிகாட்டியின் குரல் எனது காதுகளில் விழுந்தன. பாருங்கள்! ஒரு மன்னரின் சிறந்த நல்லொழுக்கம் கருணை மற்றும் மனிதன் மீது அனுதாபம் மட்டுமே மக்களிடம் எந்த மதத்தைச் சேர்ந்தவர்? எந்த மனிதர்? என்ற கவனத்தை ஏற்படுத்தும். பிறகு மக்கள் அஹ்மதி ஆனார்கள்.

எவ்வாறாயினும் நான் எனது நிலையை இறைவனிடம் ஒப்படைத்தேன். அதாவது இறைவனிடம் எனது விதியில் என்ன இருக்கிறது? என துஆ செய்தேன். மிகவும் உருக்கத்துடன் தைரியத்துடன் உறுதியாக ஒவ்வொரு நாளும் தஹஜ்ஜுதில் எனது அன்பிற்குரிய இறைவா! மறைவானவற்றை அறியக் கூடியவனே! எனது துஆவை கேட்பாயாக! எனக்கு வழிகாட்டுவாயாக! என்னை உனது அறிவில் சரியாக உள்ள வழியில் என்னை நடத்துவாயாக! இதன் மூலம் நான் நேர்வழியிலிருந்து தூரம் விலகிவிடக் கூடாது. ஏனென்றால் நான் தன்னடக்கத்துடன், பலவீனமான பாவங்களைச் செய்த மற்றும் குறைவான அறிவுடையவனாவேன் என துஆ செய்தேன்.

பிறகு எனது எஜமான் எனது முறையீட்டை கேட்டான். உண்மையான கனவுகளின் தொடர் ஆரம்பமானது. இதன் பிறகு எனக்கு மிகத் தெளிவாக இரண்டு கனவுகள் காட்டப்பட்டன. இதன் அடிப்படையில் நான் கருமு ஜில்லாவிலுள்ள கிரகோ சந்திப்பிலிருந்து ஜெர்மன் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவின் எல்லையிலுள்ள மருத்துவமனையில் நான் இன்சார்ஜ் ஆக உள்ளேன். ஜுன் 20ம் தேதி 1905-ல் கடிதம் மூலமாக இறைவனது அன்பிற்குரியவரிடம் பைஅத் செய்தேன்.

**பைஅத் செய்த பிறகு என்ன நடந்தது? என்ற விசயத்தைப் பற்றி கூறுகின்றார்:**

இபாதத்தில் எனது சிந்தனையில் இல்லாத அளவுக்கு ரசணை கிடைத்தது. ஏனென்றால் தூய மலக்குமார்களின் தூய இறங்குதல் ஏற்படும் காலமாக அது இருந்தது. ஒவ்வொரு கடிதத்திலும் அன்பிற்குரிய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வஹி இறங்குவது மற்றும் அது நிறைவேறுவது பற்றி எழுதப்பட்டிருந்தது. உள்ளம் எப்பொழுதும் ஹுஸுரை சந்திப்பதற்கு துடித்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களை சந்திப்பதற்கு எல்லை மீறிய நிம்மதியின்மை ஏற்பட்டது. ஏனென்றால் கையில் பைஅத் செய்யவில்லை. கடிதம் மூலமாகவே பைஅத் செய்திருந்தார்.

கூறுகின்றார்: இவ்வாறு எனது விடுப்புக்குரிய நாட்கள் அருகில் வந்தன. இறைவன் அன்பிற்குரிய மஸீஹிற்கு அன்பளிப்பு கொடுப்பதைப் பற்றி எனது உள்ளத்தில் போட்டான். அதற்கு நான் நான்கு நெருப்புக்கோழி முட்டைகளை எடுத்துச் செல்ல வேண்டும் என நினைத்து அதனை உறுதி செய்தேன். எனக்கு இதைப் பெறுவதற்கும் பெர்மிட் வாங்குவதற்கும் ஜெர்மன் போர்ட் இடமிருந்து முயற்சி செய்ய வேண்டியதிருந்தது. ஏனென்றால் கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

கூறுகின்றார்கள்: அக்டோபர் 1907 – இரவில் நான் எனது நாட்டிற்கு திரும்பினேன். குஜராத் சென்றடைந்ததும் எனது தந்தை மர்ஹூம் மற்றும் சகோதரர்கள் ஜமாஅத்திற்கு விரோதிகளாக இருப்பதைக் கண்டேன். அவர்களுக்காக ஒவ்வொரு தொழுகையிலும் அழுதழுது துஆ செய்ய ஆரம்பித்தேன். இறைவன் எனக்கு உதவி புரிந்தான். எனது தந்தை மற்றும் அவர்களுடன் சில நண்பர்களும் காதியான் ஆண்டு மாநாட்டிற்கு செல்வதற்காக சம்மதம் தெரிவித்தனர். நான் பேராவலுடன் துஆ செய்து வந்தேன். கடைசியில் காதியான் ஜல்ஸா வருவதற்காக எனது தந்தையும் சகோதரரும் சம்மதித்தார்கள்.

கூறுகின்றார்கள்: 1907 ஆம் ஆண்டு ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக குஜராத் ஜமாஅத்துடன் நாங்கள் காதியான் ஊருக்கு சென்றடைந்தோம். காதியான் சென்றடைந்ததும் அங்கு அற்புதமான காட்சியைக் கண்டேன். அனைத்து ஜமாஅத்துகளும், பெரிய பெரிய சான்றோர்கள், சஹாபாக்கள் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக நிம்மதி மற்றும் ஏக்கத்துடன் அலைகின்றனர். சந்திப்பதற்காக முடிந்த வரை முயற்சிகள் செய்கின்றனர். எனக்கு ஆச்சரியமும் சிந்தனையும் எல்லை மீறி சென்றது. நான் ஒரு பயணியாக தூரம் தொலைவிலிருந்து சில நாட்களுக்காக சென்றேன். சந்திப்பிற்காக இரண்டு வருடமாக துடித்துக் கொண்டிருந்தேன். ஹுஸூரை சந்திக்கக்கூடிய வாய்ப்பு தனியாக கிடைக்க வேண்டும் என உள்ளத்தில் ஆசை இருந்தது. அது நடப்பது போன்று தோன்றவில்லை. ஏனென்றால் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. தனிமையில் சந்திப்பது முடியும் என தோன்றவில்லை. எங்களது குஜராத் அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் லங்கர் கானாவில் உணவு சாப்பிடுவதில் மூழ்கியிருந்தார்கள். நான் சந்திப்பதற்காக இங்குமங்குமாக அலைந்தவாறு மஸ்ஜிது முபாரக்கின் கீழ் பகுதி வழியாக சென்று கொண்டிருந்தேன். நான் கடந்து செல்லும் போது ஒரு சகோதரரைக் கண்டேன். அதாவது ஒரு மனிதர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவரிடம் நாம் மிகத் தொலைவிலுள்ள நாட்டிலிருந்து வந்துள்ளேன். நான் ஹுஸூரை தனியாக சந்திக்க வேண்டும் என விரும்புகின்றேன் என்றார். நீங்கள் எனக்கு ஏதாவது வழிகாட்டுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர், இந்த வாசல் வழியாக ஒரு வயதான பெண் ஹுஸூருடைய பணிப்பெண் எப்போதும் வந்து செல்வாள்; அவளிடம் கூறுங்கள் என்று கூறினார். இவ்வாறு இந்த விசயம் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. பணிப்பெண் வந்தாள். நான் ஓடிப்போய் அவளிடம் மாயிஜி! நான் மிகத் தெலைவிலுள்ள நாட்டிலிருந்து வந்துள்ளேன். ஹஸ்ரத் சாஹிபை தனியாக சந்திப்பதில் ஆர்வம் கொண்டுள்ளேன் என்றேன். இந்த பயணியுடைய தூதினை ஹுஸூர் வரை எட்ட வைக்கச் செய்தால் கருணையாக இருக்கும் என்றேன். மாயி சாஹிபா மிகவும் மகிழ்ச்சியுடன் கொஞ்சம் நில்லுங்கள். நான் வருகின்றேன் என்றாள். அவர் சென்றதும் திரும்பி வந்தார்கள். உங்களது எண்ணம் நிறைவேறி விட்டதை மகிழ்ச்சியான செய்தியாக கூறினாள். ஹஸ்ரத் (அலை) அவர்கள் மேலே வாருங்கள் என்று கூறினார்கள். நான் உடனே ஓடிச்சென்று மர்ஹூமின் தந்தையையும் என்னுடன் வந்த சில அஹ்மதியல்லாத நண்பர்களையும் அழைத்து வந்தேன். நாங்கள் மேலே சென்றதும் ஒரு முற்றத்தில் நின்றிருந்தோம். ஒரு ஜன்னலின் கதவு திறந்தது. ஹுஸூர் அவர்கள் வெளியே வந்ததும் அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறினார்கள். அந்தோ! எங்களுக்கு முதலில் அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லையே!

கூறுகின்றார்கள்: விரோதியாக இருந்தபோதிலும் எனது தந்தை ஹுஸூருடைய காலில் விழுந்து விட்டார். ஹுஸூர் கருணையுடன் தனது கைகளால் அவர்களது தலையைத் தூக்கியவாறு, ஸஜ்தா செய்வதற்கு தகுதியானவன் இறைவன்தான் எனக் கூறினார்கள். அடியார்களுக்கு முன்பு குனியக் கூடாது. அல்லாஹ்வுக்கு

மட்டும் தான் ஸஜ்தா செய்ய வேண்டும். பிறகு நான் நெருப்புக் கோழியின் 4 முட்டைகளை ஹுஸுருக்கு அன்பளிப்பாக கொடுத்தேன். ஹுஸுர் அதனை கருணையுடன் ஏற்றுக் கொண்டார்கள். மிகவும் கணிவு மற்றும் பரிவுடன் நான் ஆப்பிரிக்காவில் வசிப்பதையும் பயணத்தைப் பற்றியும் விசாரித்தார்கள். எனது கையை தனது கையில் எடுத்தவாறு கூறினார்கள். இந்த உலகத்தின் பக்கம் உள்ளத்தை செலுத்தக் கூடாது. மேலும், ஒரு ஸ்டேசனில் டிக்கட் வாங்கிய பிறகு காத்திருக்கும் பயணியைப் போன்று கருத வேண்டும். ஹுஸுர் அவர்கள் நான் அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

கூறினார்கள்: தொடர்ந்து கடிதங்களில் துஆவிற்காக எழுதி வாருங்கள். பிறகு ஹுஸுர் எனது தந்தையுடன் ஒன்றிரண்டு அஹ்மதிய்யல்லாத நண்பர்களிடம் பைஅத் வாங்கினார்கள். அவர்கள் எதிரிகளாக இருந்தும் ஒரே சந்திப்பில் பைஅத் செய்ய சம்மதித்தார்கள். ஹுஸுர் அவர்கள் அழுதவாறு எங்களுக்காக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் வாங்கிய பிறகு நடைபெற்ற துஆவை அழுதவாறு செய்தார்கள். அதனால் அவர்களது கண்கள் கண்ணீரால் நிரம்பின. எங்களுக்கும் அழுவதை தடுப்பது கடினமாகி விட்டது. உள்ளம் எந்த அளவுக்கு மிருவாகவும் மென்மையாகவும் ஆனதென்றால் இன்றைய நாள் வரை ஹுஸுரின் கையுடன் எனது கை வைப்பது, ஹுஸுரின் ஒளிமிக்க முகத்தை பார்ப்பது, ஹுஸுருடைய பரிவுடைய வெட்கம் நிறைந்த கண்கள் நிரம்புவது, இந்த பாவிக்காக வழிகாட்டுவது, இஸ்திக்ஃபார் செய்வது, மீண்டும் துஆவிற்காக அதிகமாக கடிதம் எழுதுவதற்காக வழிகாட்டுவது போன்ற இவைகள் நினைவுக்கு வரும்போது உடலில் மின்னல் அடித்ததுபோன்று கண்ணீர் கொட்ட ஆரம்பித்து விடுகின்றன. அது எவ்வளவு அருளுக்குரிய காலகட்டம் ஆகும். எதிர்ப்பின் பெரும் மலை, கடல், கரை, புயல்கள் இறைவனது அன்பிற்குரிய நபியின் துஆவினால் பறந்து போவதை எனது கண்களால் பார்த்தேன். அதாவது எதிர்ப்பின் மலைகள் இறைவனின் அன்பிற்குரிய நபியின் துஆவினால் பறந்து போவதை எனது கண்களினால் கண்டேன். மற்றவர்களின் ஆலிம்களும், அறிஞர்களும் ஒரு பக்கம் இருக்கட்டும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆலிம்களின் அறிவும் இந்த முழு நிலவின் கீழ் இருட்டாக இருந்தது. எவருக்கும் எந்த விசயத்திலும் ஹுஸுரின் இருப்பின் மீது பேசுவதற்கு தைரியம் வந்ததில்லை. எவ்வாறிருப்பினும் பைஅத் செய்தேன். துஆவிற்குப் பிறகு ஹுஸுர் அவர்கள் முஸாபா செய்தார்கள். மேலும் செல்வதற்கு அனுமதி தந்தார்கள். குஜராத் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்குச் சென்ற போது, நவாப் கான் சாஹிபிடம், மற்றவர்கள் ஹுஸுரின் சந்திப்பைப் பற்றி கூறிய போது, மிகவும் ஏக்கத்துடன் எம்மையும் ஏன் உங்களுடன் அழைத்துச் செல்லவில்லை? என்றார்கள்.

பிறகு ஒரு அறிவிப்பு குலாம் முஹம்மது சாஹிபுடைய மகன் மாஸ்டர் அப்துர் ரவூஃப் சாஹிப் உடையதாகும். இவரது பைஅத் 1898 –ல் நடைபெற்றது. அதே வருடத்தில் இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்கவும் செய்தார்.

கூறுகின்றார்: ஆரம்ப நாட்களில் எனது வயது 55 ஆக இருந்த போது, நான் பீராவில் மேல்நிலைக் கல்வி பயின்று வந்தேன். அப்போது, காதியானில் ஒரு மனிதர் பிறந்திருக்கிறார். அவர் தம்மை இமாம் மஹ்தியாக வாதம் செய்கிறார் என்ற சர்ச்சை பீராவில் நடைபெற்றது. இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக எனது முஹல்லா வரை விசயம் எட்டியது. ஒரு மனிதர் – அதாவது அவரது பெயர் மிர்ஸா குலாம் அஹ்மது ஆகும். அவர் இமாம் மஹ்தியாக தன்னை வாதிக்கிறார். நான் அப்போது சிறுவனாக இருந்தேன். அவ்வளவான அறிவு எனக்கு கிடையாது. ஆனால் எனது சகோதரரான குலாம் இலாஹி அவரது நூல்களைப் படித்து மிர்ஸா சாஹிபிடம் பைஅத் செய்து விட்டார்.

இவரது பெயரும் 313 பேரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரது பெயர் அஞ்சாமே ஆத்தமில் உள்ள பொருளடக்கத்தில் 249ம் பக்கத்தில் மிஸ்திரி குலாம் இலாஹி சாஹிப் பேரா என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், எனது சகோதரர் வீட்டிலுள்ள அனைவரின் பெயரையும் பைஅத்திற்காக எழுதினார். அப்போது நானும் முஹல்லாவிற்கு வரக்கூடிய மிர்ஸா சாஹிபின் நூல்கள் மற்றும் பிரசுரங்கள் போன்றவற்றை படித்து வந்தேன். தனது பள்ளிவாசலிலும் இரவில் படித்துக் கூறுவேன். கங்கா பவுன், அப்துல்லாஹ் ஆத்தம்

போன்றவை தற்போது வரை நினைவில் உள்ளன. இவர்களைப் பற்றி வெளியிடப்பட்ட பிரசுரங்கள் போன்றவற்றால் மிர்ஸா சாஹிபை சந்திப்பதற்கான ஆர்வம் எனக்கும் ஏற்பட்டது. அதாவது எனக்கு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்க வேண்டும் என ஆர்வம் ஏற்பட்டது. பேராவிலேயே மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ஒரு பாலத்தில் அமர்ந்து இருட்டில் துஆ செய்து வந்தேன். இறைவா! மிர்ஸா உண்மையாளர் என்றால் என்னையும் காதியான் சென்றடையச் செய்வாயாக! அவர் பொய்யர் என்றால் பேராவிலேயே என்னை இருக்கச் செய்வாயாக! அங்கே செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று துஆ செய்தேன்.

கூறுகின்றார்கள்: நான் 10ம் வகுப்பு தேர்வினை ராவல்பிண்டியில் எழுதினேன். சூரிய, சந்திர கிரகணம் 1311 ஹிஜ்ரியில் நடைபெற்ற போது நான் எனது கண்களால் அதனைக் கண்டேன். அப்போது நான் நடுநிலைப்பள்ளியில் படித்து வந்தேன். நான் தேர்விலிருந்து 1899-ல் வெளிவந்ததும் எனது சகோதரர் குலாம் இலாஹி என்னை காதியானுக்கு தன்னுடன் அழைத்துச் சென்றார். அப்போது நான் மிர்ஸா சாஹிபின் கையில் பைஅத் செய்தேன். இந்த நேரத்தில் பள்ளிவாசல் சிறியதாக இருந்தது. சிறிது நாட்கள் தங்கி விட்டு பிறகு எனது சகோதரருடன் பேரா திரும்பி வந்தேன். ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் எனது சகோதரரை அறிந்தவராய் இருந்தார். அதனால் எனது சகோதரருக்கு உமது சகோதரர் அப்துர் ரவூஃபை காதியானுக்கு அனுப்பி வையுங்கள் என எழுதினார்கள்.

இறுதியில் இறை அருளால் 1899-ல் மீண்டும் காதியான் சென்றடைந்தேன். மவ்லவி சாஹிப் மற்றும் ஹஸ்ரத் சாஹிபை சந்தித்தேன். மவ்லவி சாஹிபிற்கு எனது படிப்பைப் பற்றி தெரிந்திருந்தது. மேலும் நான் ஏழையாவேன். அதாவது அந்தக் காலத்து படிப்பிற்கேற்ப நான் படித்தவன் ஆவேன். ஆனால் ஏழையாகவும் இருந்தேன். எனவே மவ்லவி சாஹிப் என்னை மத்ரஸாவில் பணியாற்றுமாறு நியமித்தார்கள். 1899 -ல் மாதம் எட்டு ரூபாய் சம்பளத்தில் தொடக்கபள்ளியின் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். அப்போது ஐந்து, ஆறு வகுப்புகளே இருந்தன. நடுநிலை வகுப்பு இருந்ததில்லை. இறுதியில் நான் ஆசிரியர் பணியை 1902 வரை செய்தேன். அந்தக் காலத்தில் மவ்லவி சேர் அலி சாஹிப் மத்ரஸாவுடைய தலைமையாசிரியராக இருந்தார்கள். தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு கல்வியும் கற்றுக் கொடுத்து, ஐவேளை தொழுகையையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நிறைவேற்றி வந்தேன். அப்போது மவ்லவி அப்துர் கரீம் சாஹிப் இமாமாக நின்று தொழ வைத்து வந்தார்கள். ஐவேளை தொழுகையிலும், ஹஸ்ரத் சாஹிபின் மஜ்லிஸிலும் உட்காருவேன். வீட்டிலிருந்து வரும் போது தொழுகைக்கு முன்பாக தனது இல்ஹாம்கள், கஷ்ஃபுகள், ரூஃயாக்கள் மற்றும் கனவுகளை கூறுவார்கள். நானும் அதிலிருந்து பயன் பெறுவேன். தொழுகைக்குப் பிறகு வாய்ப்பு கிடைத்தால் கால்களை அமுக்கி விடுவேன். சுடக்கு எடுத்து விடுவேன். சில நேரத்தில் ஹுஸுர் அவர்கள் பள்ளிவாசலில் சாப்பிட்டு வந்தார்கள். நானும் விருந்தினர்களுடன் பள்ளிவாசலில் சாப்பிட்டு வந்தேன். ஹஸ்ரத் சாஹிபின் மீதியிருந்த உணவை பரக்கத்திற்காக சுவை பார்த்து வந்தேன். மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ஹுஸுர் அவர்கள் இருக்கையில் அமர்வார்கள். பல்வேறு வகையான இறைவார்த்தைகள், கஷ்ஃப், கனவுகளை கூறுவார்கள். எனது சிந்தனையின்படி மிஸ்டர் டூயி, சிராக் தீன் ஜம்மு, மவ்லவி கரிமுத்தீன், சம்சுதீன் போன்றவர்களைப் பற்றி இல்ஹாம்கள், கனவுகள் போன்றவை வந்தன. இந்த அனைத்து விசயங்களும் நூல்களில் வெளிவந்து விட்டன. திரும்பவும் எழுதுவதற்கு அவசியமில்லை.

மாஸ்டர் அப்துர் ரவூஃப் சாஹிபைப் பற்றி மேலும் அதிகமாக இங்கு அடிக்குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. இவர் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பென்சனர் ஆவார். காதியான் தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப்பள்ளியின் முன்னாள் ஹெட் கிளர்க் ஆவார். 1899 முதல் 1902 வரை ஸ்கூலில் ஆசிரியராக பணியாற்றினார். அதற்குப் பிறகு ரிவூ ஆஃப் ரிலீஜியன் அலுவலகத்தில் பணிபுரிந்தார். 1906 முதல் 1907 வரை ஸ்கூலில் ஹெட் கிளார்க் ஆக இருந்துள்ளார். நான் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சூரிய சந்திர கிரகணம் ஏற்பட்ட காலத்திலிருந்தே ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று கூறுகின்றார்.

அடுத்து ஓர் அறிவிப்பு மவ்லவி முஹம்மது அப்துல் அஸீஸ் சாஹிப். இவர் அப்துல்லாஹ் சாஹிபுடைய மகன் ஆவார். இவரது பைஅத்தின் வருடம் 1904 ஆகும். நான் எனது பைஅத் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது

(அலை) அவர்களிடம் கண்ணால் கண்ட நிலைமைகளைக் கூறுவதற்கு முன்பாக, எனது தந்தை – ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபி மர்ஹூம் ஜனாப் மவ்லானா மவ்லவி முஹம்மது அப்துல்லாஹ் சாஹிபின் நிலைமைகளைப் பற்றி கூறுகின்றேன்.

இவரது சம்பவம் மிகவும் உள்ளம் ஈர்க்கக் கூடியதாகும். ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சோதிக்க விரும்பினார்கள். எல்லா வகையிலும் திருப்தியான பிறகு அவர் பைஅத் செய்தார். எவ்வாறிருப்பினும், இவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்தவராவார். இவர் கண்களால் கண்ட பல சம்பவங்கள் இருந்தன. ஆனால் பதிவு செய்யக்கூட முடியவில்லை. பிறகு அவர் இறந்து விட்டார். எனவே தந்தை செய்ய முடியாததை மகன் செய்து முடிப்பான் என்ற அடிப்படையில், பார்ஸி கவிதையில், எந்த வேலையை தந்தையால் செய்ய முடியவில்லையோ அதனை மகன் முழுமையடையச் செய்வான் என்று கூறுகின்றார்.

கூறுகின்றார்கள்: எனது தந்தையார் மவ்லவி முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் முஸாபைனியின் சர்க்பூர் தபால் நிலையம் சேக்குபூரா மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் அஹ்லே ஹதீஸில் எண்ணம் கொண்டவராவார். சமுதாயத்தின் மிகப்பெரிய தலைவர் ஆவார். மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவி மற்றும் மவ்லவி நஸீர் ஹுஸைன் சாஹிப் தெஹ்லவி போன்றோர் இவரை அஞ்சுமன் அஹ்லே Deputy Commissioner ஆக்கினார்கள். அந்தப் பகுதியில் மிகப்பெரிய தலைவராக மதிக்கப்பட்டார். அவர்களுடைய பிரதிநிதியாக செயல்பட்டார்.

கூறுகின்றார்: இவரது புகழின் காரணமாக முஅஸ்தே குலாம் நபி குர்தாஸ்பூரைச் சேர்ந்தவர். இவர் அஹ்லே ஹதீஸ் ஆவார். இவரை தனது அருகில் அழைத்துக் கொண்டார். அவரிடம் எங்களது அருகில் காதியான் என்ற ஓர் ஊர் உள்ளது. அங்கு மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் வசிக்கிறார்கள். அவர் இல்ஹாம் இறங்குவதாக வாதம் செய்கின்றார். அவர் ஒரு மகனைப் பற்றி முன்னறிவிப்பு செய்துள்ளார். அது நிறைவேறவில்லை. முதலில் பெண் பிள்ளை பிறந்தது. அதற்கு பிறகு ஒரு பையன் பிறந்தான்.

**இது முஸ்லிஹ் மவ்வூது உடைய முன்னறிவிப்பாகும். இதனைப் பற்றி கூறுகின்றார்.**

அஹ்மதியல்லாத மவ்லவிகள் இவரிடம், முதலில் பெண் பிள்ளை பிறந்தது. பிறகு பையன் பிறந்தான். அவன் சில நாட்களிலேயே மரணித்து விட்டான். இப்படிப்பட்ட மனிதரிடம் சென்று முனாஸரா செய்துள்ளோம் என்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னறிவித்ததற்கு எதிராக இல்ஹாம் வஹி இறங்குகிறது என்பது இவரது கொள்கையாகம். இவரை அழைத்து முனாஸரா செய்யுங்கள் என்றார்கள். இன்றைய நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தவிதமான வாதமும் செய்யவில்லை. இல்ஹாமின் தொடர்ச்சி மட்டும் தான் இருந்தது. ஹுஸுீர் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை எழுதி வந்திருந்தார்கள். இவர் காதியான் வந்தார். அதாவது இவரது தந்தை இவரைப் பற்றித்தான் கூறுகின்றார்கள். ஹுஸுீரிடம் மேற்கூறப்பட்ட முன்னறிவிப்பைப் பற்றி பேசப்பட்டது. அதாவது முஸ்லிஹ் மவ்வூது முன்னறிவிப்பு பற்றி பேசப்பட்டது. மேலும் உங்களுடைய இல்ஹாம்கள் சரியானதாக இருந்தால் மகனைப் பற்றிய முன்னறிவிப்பு ஏன் நிறைவேறவில்லை? எனக் கேள்வி கேட்டார். முதலில் மகள் பிறந்தாள். பிறகு மகன் பிறந்தான். அவனும் மரணித்து விட்டான். முன்னறிவிப்புகள் இவ்வாறாகத்தான் இருக்குமா? என்று கேட்டார்.

இவ்வாறு எனது தந்தையார் கூறி வந்தார். இதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஜ் செய்வதைப் பற்றி ஏதாவது முன்னறிவிப்பு செய்துள்ளார்களா? என்று கேட்டார்கள். மவ்லவி சாஹிப் ஆம் என பதிலளித்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு இருந்தது. ஆனால் அது, அந்த வருடமே நிறைவேறியதா? பெருமனார் (ஸல்) அவர்கள் ஹஜ் செய்து விட்டு வந்தார்களா? அதற்கு இவரது தந்தையான மவ்லவி சாஹிப், அந்த வருடம் ஹஜ் செய்யவில்லை. ஆனால் அதற்கு அடுத்த வருடம் ஹஜ் செய்தார்கள் என்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நான் இந்த வருடமே மகன் பிறந்து விடுவான் என எப்போது கூறினேன். இது இறைவனது முன்னறிவிப்பாகும். அது நிறைவேறும். நிச்சயமாக நிறைவேறும். அது எந்த வருடம் வேண்டுமானாலும்

நிறைவேறலாம். இதற்கு ஒரு காலகட்டம் உள்ளது. இதற்கு ஒரு வருடம் என நிர்ணயிக்கப்படவில்லை. அதற்குப் பிறகு மவ்லவி சாஹிப் புதிதாக எந்த கேள்வியையும் கேட்கவில்லை. அத்துடன் அந்த பேச்சுவார்த்தை நின்று விட்டது. ஆனால், உங்களது முன்னறிவிப்பு நிறைவேறவில்லை என்ற ஆட்சேபனையை வலியுறுத்திக் கூறிக் கொண்டேயிருந்தார்.

எவ்வாறிருப்பினும் இதற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மார்ச் 1886 -ல் தனது பிரசுரம் ஒன்றை வெளியிட்டார்கள். அதில் அந்த வாக்களிக்கப்பட்டவர் ஒன்பது வருடத்திற்குள் பிறப்பார் என காலத்தையும் நிர்ணயித்தார்கள். இதற்குப் பிறகு ஒன்றிரண்டு என பல பிரசுரங்களில் இதனை கூறியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது உடைய முன்னறிவிப்பு நிறைவேறியது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பிறந்தார்கள்.

தொடர்ந்து எழுதுகிறார்: மவ்லவி சாஹிப் அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் விவாதம் செய்ய வந்த இவரது தந்தை அரபி, பார்ஸியில் தேர்ச்சி பெற்றவர் ஆவார். அரபி இலக்கணம், தர்க்கம், பத்இ, பயான் போன்றவற்றில் தனக்கு நிகரில்லா மனிதராக இருந்தார். தனது அறிவின் மூலமாக அறிவுசார்ந்த இந்த ஆதாரம் மற்றும் பதில் மூலமாக எதுவும் பெறவில்லை. அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் நடந்த விவாதத்திலிருந்து அவர் எந்த பயனும் அடையவில்லை. இது உண்மை தான். குல்லு அம்ரின் மர்ஹூனுன் பி அவ்காதிகா – ஒவ்வொரு வேலைக்கும் ஒரு வேலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அப்போது அவர் மறுப்பதிலேயே நிலைத்திருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய விசயங்களைக் கேட்கவேயில்லை. ஹுஸூர் இவருடைய அறிவை ஆராய்ந்தவாறு தனது ஒரு கருணையினைக் காட்டியவாறு இதனை கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவரது பேச்சிலிருந்து இவர் அறிவு படைத்த மனிதர் ஆவார் என்பதைக் கண்டறிந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், அவரிடம் மவ்லவி சாஹிப் நான் பராஹீனே அஹ்மதிய்யா என்ற பெயரில் ஒரு நூலை எதிரிகளின் ஆட்சேபனைகளுக்குப் பதிலாக எழுதியுள்ளேன். இதில் 10 ஆயிரம் ரூபாய்க்கான சவாலும் உள்ளது. இன்றைய நாட்களில் இது ஆச்சரியப்படும். நீங்கள் இங்கு தங்குகிறீர்கள் என்றால் அச்சிடுவதற்கு புரூஃப் போன்றவை பார்த்து வந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்றார்கள். இதற்குரிய கூலி உங்களுக்கு கொடுக்கப்படும். மவ்லவி அப்துல் அஸீஸ் சாஹிப் தனது தந்தை பற்றி எழுதுகிறார். ஆனால் வருத்தம் என்னவென்றால் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. வெறுமனே திரும்பிச் சென்றார்கள். இந்த மறுப்பிலேயே ஏறக்குறைய 15,16 வருடங்கள் கழிந்தன. ஆனால் அவர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. எப்போதும் அவருடைய இயல்பில் ஒரு நன்மை இருந்தது.

கூறுகின்றார்கள்: அவர் ஒரு நல்ல இயல்புடைய மனிதராவார். யாராவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏசினால் அல்லது இழிவாக நினைவு கூர்ந்தால் உடனே அவரை தடுப்பார்கள். இறைவன் காஃபிர்களின் சிலைகளை ஏசுவதைக் கூட தடை செய்துள்ளான் எனக் கூறுகின்றார்கள். ஆக, இந்த அல்லது வேறு சில சம்பவங்கள் இவரது இயல்பில் இருந்தது. மேலும் அது ஹிதாயத்திற்கு காரணமாக அமைந்தது.

கூறுகின்றார்கள்: இவ்வாறு காலம் கடந்தவாறு 15, 16 வருடங்கள் கழிந்தன. 1902-ம் ஆண்டு வந்தது. இந்த நேரத்தில் இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது நூல் ஜங்கே முகத்தஸ், ஆயினே கமாலாத்தே இஸ்லாம் போன்றவற்றை படித்து முடித்திருந்தார்கள். இவரது மூளையில் உதித்த பல கேள்விகளுக்கு விளக்கம் கிடைத்தன. பதில் கிடைத்தது. இந்த இரண்டு நூல்களை படித்ததும் மவ்லவி சாஹிபிற்கு பல்வேறு கேள்விகளுக்கு பதில் கிடைத்தது. ஆனால் பல புதிய ஆட்சேபனைகளும் தோன்றின. இந்த வகையில் இவர் 21 கேள்விகளை தயார் செய்தார். அதாவது ஆட்சேபனைகளாக எழுந்தவையெல்லாம் 21 கேள்விகளாக குறித்து வைத்தார். 1902-ல் ஹஸரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் முனாஸரா செய்வேன் என எண்ணியவாறு காதியான் சென்றார். நேரடியாக மஸ்ஜித் முபாரக் வந்தார். யாரிடமும் எதுவும் கூறவில்லை. அங்குள்ள எவரிடமும் எதுவும் கேட்கவில்லை. நேராக மஸ்ஜித் சென்றார். இதற்கான காரணம் பின்னால் வரும். ஏதோவொரு தொழுகை நேரத்தில் சென்றார். தொழுகையை ஜமாஅத்தாக தொழுதார்.

பிரசித்தி பெற்ற விசயம் என்னவென்றால், மிர்ஸா சாஹிப் சில ஏஜெண்டுகளை வைத்துள்ளார்கள். அவர்கள் வரக்கூடிய விருந்தினர்களிடம் அனைத்தையும் கேட்டு வைப்பார்கள். பீர்களின் பழக்கம் போல், உள்ளே விசயத்தை எட்ட வைத்து விடுவார்கள். மேலும் மிர்ஸா சாஹிப் எந்த அறையில் இருப்பார்களோ அதற்கு பல கதவுகள் இருக்கும். வித்தியாசமான கதைகளை உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு விசயத்திற்கென்றும் தனித்தனி வாசல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். விருந்தினர் உள்ளே செல்லும் போது விருந்தினர் மிர்ஸா சாஹிபிடம் செல்லும் போது, முதலிலேயே விசயம் மிர்ஸா சாஹிபிற்கு எட்ட வைக்கப்பட்டிருக்கும். அதனால் சென்றதும் உங்களுடைய பெயர் இதுவா? நீங்கள் இங்கிருந்து இந்த காரணத்திற்காக வந்துள்ளீர்கள்? இப்படிப்பட்ட விசயங்கள் மூலமாக விருந்தினர்களுக்கு உறுதி ஏற்பட்டு விடும். எனவே இந்த கதைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி பிரபல்யமாக கூறப்பட்டதாகும். எனவே இவர் எதுவும் கூறவில்லை.

கூறுகின்றார்கள்: இப்படிப்பட்ட விசயங்களின் மூலமாக இவர் தானாகவே எல்லாவற்றையும் கூறுகிறாரே என்று விருந்தினர்களுக்கு நிச்சயமாக வலியுல்லாஹ் என உறுதியாகி விடும். ஆக, அந்த சமயத்தில் மவ்லவி சாஹிபின் உள்ளத்தில் இந்த விசயம் இருந்தது. என்னிடம் யாராவது ஏதாவது கேட்டால் நான் யாரிடமும் எதுவும் கூறக்கூடாது என நினைத்திருந்தேன். இந்த காரணங்களினால் அவர் நேராக மஸ்ஜிதிற்கு வந்தார். யாரிடமும் எதுவும் கேட்கவில்லை. பிறகு இந்த விசயம் தவறு என தெரிய வந்தது. இது எதிரிகளால் இட்டுக்கட்டிக் கூறப்பட்டதாகும் என தானாகவே கூறுகின்றார்.

எவ்வாறிருப்பினும், தொழுகைக்குரிய நேரமாக இருந்தது. அல்லது தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர் ஜமாஅத்தாக தொழுதார். தொழுகைக்குப் பிறகு ஹுஸுர் அவர்கள் இருக்கையில் அமர்ந்தார்கள். மற்ற சகோதரர்கள் வலப்புறம் இடப்புறமாக அமர்ந்தார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறி சந்தித்த பிறகு மவ்லவி சாஹிப் மறைவாக இருந்தவாறு ஹுஸுருடைய கால்களை அமுக்கி விட ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். இறைவனுடைய நபிமார்களை சோதித்துப் பார்ப்பது நல்லதாக இருக்காது. ஏனென்றால் இவரது எண்ணம் அமுக்கி விடுவதாக இருக்கவில்லை. மாறாக வேறொன்றாக இருந்தது. அது பின்னால் கூறப்படும். இதனால் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனுடைய நபிமார்களை சோதிப்பது நல்லது கிடையாது எனக் கூறினார்கள். அல்லாஹ் உடனடியாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உள்ளத்தில் இந்த அமுகுரல் நல்லொழுக்கத்தினால் அல்ல. வேறேதோ காரணம் என போட்டான்.

எவ்வாறிருப்பினும், இது ஒரு அடையாளமாகும். ஹுஸுருடைய முதல் சந்திப்பிலேயே மவ்லவி சாஹிப் தெரிந்து கொண்டார். இவ்வாறு மகன் தனது தந்தை பற்றி கூறுகின்றார். அவருக்கு ஈமானி ரூஹை பெறுவதற்கு எண்ணம் தோன்றியது அல்ஹம்துலில்லாஹ்!

எழுதுகிறார்: விசயம் என்னவென்றால், மவ்லவி சாஹிப் கூறுகின்றார்கள். ஹதீஸ் அல்லது அறிவிப்பில் பார்த்தேன். ஹஸ்ரத் இமாம் மஹ்தியின் உண்மைத்துவத்திற்கு ஒரு அடையாளமாக அவரது பாதம் பஞ்சாபியில் லப்பா என எழுதப்பட்டுள்ளது. குழியாக இருக்காது. மாறாக நேராக இருக்கும். தட்டையானதாக இருக்கும். அதிக குழியாக இருக்காது. அவர் இந்த நோக்கத்தில் தான் ஹுஸுருடைய பாதங்களைப் பிடித்தார். அமுக்குவதற்காகப் பிடிக்கவில்லை. மாறாக குழி இருக்கிறதா? இல்லையா? என பார்ப்பதற்காகவே பிடித்தார். இதன் மூலமாக இரண்டு அடையாளங்களை அவர் பார்த்தார். ஒன்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றிற்கேற்ப அந்த குழி அதிகமாக இல்லை. இரண்டாவது ஹுஸுர் தானாகவே இறைவனது நபிமார்களை சோதனை செய்வது சரியானது கிடையாது எனக் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு யாரும் தெரிவிக்கவில்லை. இறைவன் தான் அறிவித்தான். அங்கு பல்வேறு மக்கள் ஹுஸுருடைய காலை அமுக்கி விடுவார்கள். ஆனால் இந்த வார்த்தையை அல்லது அந்த சமயத்தில் கூறிய இறைவனது நபிமார்களை சோதனை செய்வது சரியானதல்ல என்பதை ஒருபோதும் கூறியதில்லை. பிறகு அந்த சமயத்தில் அமுக்கக் கூடியவர் சோதனைக்காகத்தான் அமுக்குகிறார் என்பது எவ்வாறு தேன்றியது? நிச்சயமாக அப்போது அமுக்கியதும் சோதனைக்காக அமுக்கப்பட்டது தான். ஆக, தனது கண்களால் கண்ட இது ஒரு தெளிவான அடையாளமாகும். ஈமானின் புத்துணர்வைப் பெற்றார். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஆலி முஹம்மதின்.

பிறகு எழுதுகின்றார்: இதன் பிறகு மவ்லவி சாஹிப் ஹுஸீர் எனக்கு சில கேள்விகள் இருக்கின்றன. அனுமதித்தால் கேட்கின்றேன் என்றார். ஹுஸீர் அவர்கள் அனுமதி வழங்கினார்கள். மவ்லவி சாஹிப் முதல் கேள்வியைக் கேட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு உணவளிக்கக்கூடியவர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் ஹஸ்ரத் உம்மே அய்மன். அவரிடம் ஹுஸீர் (ஸல்) அவர்கள் தினமும் அல்லது பெரும்பாலும் சென்று புதிய வஹியைக் கூறுவார்கள். இதன் மூலம் அவர் மகிழ்ச்சியாக இருந்தார். அதாவது வஹியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து வந்தார். எதுவரையென்றால், ஹஸரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அதன்பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்கள். அவர்களும் ஒருமுறை அந்த தாயாரை அதாவது உம்மே அய்மனை சந்திக்கச் சென்றார்கள். அந்த தாயார் அழ ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதற்காகவா அழுகின்றீர்கள். இது இறைவனது நடைமுறையாகும். அது நிறைவேறியது. அதற்கு அம்மா ஜான் கூறினார்கள். இல்லை. நான் ஏன் அழுகின்றேன் என்றால், இன் கத்தாஅத்தில் வஹியு. இன்று வஹி நின்று விட்டது என்றார்கள். எனவே ஹஸ்ரத் அம்மா ஜான் சாஹிபா அவர்கள் இன்கத்தாயே வஹி (வஹி நின்றதை) ஏற்றுக் கொண்டிருக்கும் போது, நீங்கள் எவ்வாறு நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு வஹி உண்டு எனக் கூறுகின்றீர்கள் என்பது அவரது கேள்வியாகும். மிகப்பெரிய முன்னுரைக்குப் பிறகு இந்த கேள்வியைக் கேட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது காலத்தில் வஹி நின்று விட்டது. பிறகு இப்போது எப்படி வஹி வர முடியும்? எனக்கு வஹி வருகிறது எனக் கூறுகின்றீர்களே அது எவ்வாறு முடியும்? எனக் கேட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இன் குன்த்தும் கைர உம்மத்தின் என்ற அடிப்படையில் இதனை சிறந்த உம்மத்தாக ஒப்புக் கொள்கின்றீர்களா? அதற்கு மவ்லவி சாஹிப் ஆம் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நீங்கள், அவ்ஹய்த்து ஹவாரியீன் (ஹவாரியீன்களுக்கு வஹி அறிவித்தேன்), அவ்ஹய்னா இலா உம்மமூஸா (மூஸாவின் தாயாருக்கு வஹி அறிவித்தோம்), அவ்ஹய்னா ரப்புக இலன் நஹ்ல் (மேலும் உமது இறைவன் தேனீக்களுக்கு வஹி அறிவித்தான்) என்ற இந்த வசனத்தின் அடிப்படையல், மஸீஹ் உடைய சீடர்கள், மூஸாவுடைய தாயார் மற்றும் தேனீக்களுக்கு இறைவனது வஹி இறங்கியது; இறங்குகின்றது. இது பல்வேறு வசனங்களிலிருந்து எடுக்கப்பட்ட பகுதியாகும். இதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா? மவ்லவி சாஹிப் ஆம் என்றவாறு வஹி இறங்கியது; இறங்குகிறது என்றார்.

இது நல்லவொரு தப்லீக் போன்ற விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த உம்மத் மஸீஹ் உடைய சீடர்கள், மூஸாவுடைய உம்மத்தின் பெண்கள், மற்றும் விலங்குகளை விட மோசமானதாகவா இருக்கின்றது. அவர்களுக்கு வஹி இறங்கியது. ஆனால் நபி (ஸல்) அவர்களுடைய உம்மத்திற்கு அதாவது சிறந்த உம்மத்திற்கு வஹி இறங்காதா? அதற்கு மவ்லவி சாஹிப் கூறினார்கள். இந்த வஹிகளைப் பற்றி திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. இந்த முஹம்மதிய உம்மத்திலும் வஹி இறங்கும் என எங்கேயாவது கூறப்பட்டுள்ளதா? அதற்கு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். நீங்கள் முந்தைய உம்மத்துகளில் வஹி இறங்கியது என ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். மேலும் அல்லாஹ் சூரா ஃபாத்திஹாவில் துஆவைக் கற்றுத் தந்துள்ளான். அது இல்லாமல் தொழுகையே கூடாது என்பது உங்களது நம்பிக்கையாகும். ஒவ்வொரு ரக்அத்திலும் இதனை ஓதுவது கடமையாகும்.

கூறுகின்றார்கள்: ஸிராத்தல்லஸீன அன்அம்த்த அலைஹிம் – இறைவா! நீ எங்களுக்கு, எவர்கள் மீது அருட்களை இறக்கினாயோ அவர்களது வழியினைக் காட்டுவாயாக! அந்த ஈமானை எங்களுக்கு வழங்குவாயாக! அவர்களிடத்தில் வஹி உடைய அருள் இருக்கும் போது, மக்களிடம் வஹி உடைய இருக்கும் போது துஆவின் மூலமாக இந்த உம்மத்தில் வயி ஏன் இறங்க முடியாது?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இரண்டாவது ஆதாரம், எவர்கள் எங்களது இறைவன் அல்லாஹ் எனக் கூறிவிட்டார்களோ, மேலும் அதில் நிலைநின்றார்களோ, உறுதிப்பாட்டை மேற்கொண்டார்களோ அவர்கள் மீது இறைவனது மலக்குகள் இறங்குவார்கள். நீங்கள் வருத்தம் அடையாதீர்கள்.

பயப்படாதீர்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கப்படுகின்றது என்ற வசனத்தின்படி, அல்லாஹ், மலக்குமார்களின் மூலமாக வஹி இறங்குவது அவசியமாகும் என்றும், இந்த உம்மத்தின் மூஃமின்கள் மற்றும் உறுதியாக நிலைநின்றவர்களுக்கும் வஹி இறங்கும் என்றும் கூறுகின்றான்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சிறந்த உம்மத்தின் மூஃமின்களுக்கு இந்த உலகிலும் மறுமையிலும் வாழ்விற்குரிய நற்செய்தி கிடைக்கும் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

ஆக, இந்த நற்செய்திகள் வஹி இல்லையெனில் வேறென்ன? விவாதம் நடைபெற்றபோது இந்த விசயத்தின் கீழ் ஹுஸூர் அவர்கள் மேலும் பல்வேறு வசனங்களை வஹி இறங்குவது தொடர்பாக எடுத்துரைத்தார்கள்.

மவ்லவி சாஹிப் கூறினார்கள். ஹுஸூர் இது உண்மைதான். இந்த வசனங்களிலிருந்து வஹி இறங்குவது நிரூபணமாகின்றது. ஆனால் இந்த உம்மத்தில் வஹி இறங்குகிறது என்றால் அம்மா ஜான் இன்று வஹி நின்று விட்டது என ஏன் கூறினார்கள்? அவர்களுக்கு இந்த வசனங்களைப் பற்றி தெரியாமல் இருந்ததா? ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். மவ்லவி சாஹிப்! இந்த இடத்தில் அல்வஹியு என்பதில் அலிஃப் லாம் எதற்காக உள்ளது? அலிஃப் லாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிக் கொண்டிருந்த அந்த வஹியின் பக்கம் சுட்டிக் காட்டுகிறது. ஹுஸூர் அவர்கள் தினமும் எடுத்துரைத்து வந்ததன் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிய குர்ஆனிய சரீஅத் வஹி தான் நிச்சயமாக நின்று போனது, நின்று போய் விட்டது. இதிலிருந்து திருக்குர்ஆன் வசனங்களில் நுஸூலே வஹி பித்தஸ்ரிஹ் (விளக்கம் தரும் இறை அறிவிப்புகள்) இருக்கின்றதே! கியாமத் வரை இப்படிப்பட்ட வஹி நின்று விட்டது என்று எங்கு நிரூபணமாகிறது?

இதன் மூலம் மவ்லவி சாஹிப் அமைதியாகி விட்டார்கள். புதிதாக எந்தவொரு கேள்வியும் கேட்கவில்லை. 21 கேள்வியிலிருந்து ஒரு கேள்வியை மட்டும் தான் கேட்டார்கள். அதிலேயே அவருக்கு திருப்தி ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதற்குப் பிறகு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட நீண்ட உரை நிகழ்த்தினார்கள். மிகவும் நீண்ட, ஆதாரங்கள் நிறைந்த உரையை நிகழ்த்தினார்கள். இதன் மூலம் மவ்லவி சாஹிப் குறித்து எடுத்து வந்த அந்த ஆட்சேபனைகளுக்கு தானாகவே தீர்வு கிடைத்தது. மவ்லவி சாஹிப் மற்ற கேள்விகளைக் கேட்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் உரை நிகழ்த்திய பிறகு அதில் அனைத்து கேள்விகளுக்கும் பதில் கிடைத்து விட்டன.

கூறுகின்றார்கள்: அவர் குறிப்பு எடுத்துக் கொண்டு வந்தார். தனது சட்டைப் பையிலேயே வைத்திருந்தார். இந்த சந்திப்பிற்கு முன்பாக இந்த கேள்விகளைப் பற்றி எவரிடமும் கூறவில்லை. இதனால் மவ்லவி சாஹிப் மிகவும் வியப்படைந்தார்கள். மேலும் இந்த மனிதர் மீது வஹி இறங்கவில்லை என்றால், அன்னாருக்கு அவரிடம் எழுதப்பட்டிருந்த அல்லது பைகளில் வைக்கப்பட்டிருந்த விசயங்களைப் பற்றி கேள்விகளைப் பற்றி யார் தெரிவித்திருப்பார் என சிந்தனை தோன்றியது. சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு கூறினார். எனது பையில் உள்ள அனைத்து கேள்விகளுக்கும் கேட்காமலேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பதில் கூறிவிட்டார்கள். சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு கூறினார். ஹுஸூர் கையை நீட்டுங்கள். நான் உங்கள் கையில் பைஅத் செய்கின்றேன் என்றார்.

ஆக, அவர் இறை அருளால் அந்த நேரத்திலேயே பைஅத் செய்து விட்டார். அதற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது எந்தவிதமான ஆட்சேபனையும் அவர்களுக்கு ஏற்பட்டதில்லை. ஒவ்வொரு நாளும் அவருடைய அறிவு மற்றும் ஞானம் வளர்ந்து கொண்டே சென்றது. இதற்குப் பிறகு முதல் கலீஃபத்துல் மஸீஹ் உடைய பைஅத்திலும் அது இது என்று கூறாமல் இணைந்தார்கள். இரண்டாவது கிலாஃபத்தின் போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹிடமும் பைஅத் செய்தார். ஒருபோதும் எந்த விதமான சந்தேகமும் ஏற்பட்டதில்லை. அல்ஹம்துலில்லாஹ் அலா தாலிக்.

பிறகு அவரது மகன் எழுதுகின்றார்கள்: இவர் பைஅத் செய்து விட்டு வீடு திரும்பிய போது துபாபா பாரி மற்றும் சனாப் உடைய பகுதியில் வசித்த பெரும்பாலார் அவரை பின்பற்றக்கூடியவராக இருந்தனர். மவ்லவி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தால் இவர்கள் அனைவரும் பைஅத்தில் இணைந்து விடுவார்கள் என நினைத்தேன். ஆனால் நடந்தது என்ன? இவர் பைஅத் செய்ததும், அனைவரும் இவருக்கு விரோதியாகி விட்டனர். அவரை கொலை செய்வதற்கு திட்டங்கள் தீட்ட ஆரம்பித்தனர். ஆனால் அவர் மிகவும் உறுதியான நிலைநிற்றலுடன் அவர்களை எதிர்கொண்டார்கள். அன்பான முறையில் தப்லீகினை தொடர்ந்தார்கள். ஏறக்குறைய 18 வருடம் வரை கௌரவ மவ்லவியாக இருந்தார்கள். இறை அருளால் இவர் மூலமாக ஏறக்குறைய 300 பேர் அல்லது அதனை விட அதிகமானோர் ஜமாஅத்தில் இணைந்தார்கள்.

ஆக, இது அறிவிப்புகளாகும். அந்த மக்களைப் பற்றிய சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறினேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்து தனது ஆன்மீகத்திலும் மேலும் முன்னேற்றம் அடைந்தார்கள். அல்லாஹ் பற்றிய அறிவும் வளர்ந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் அன்பு மற்றும் நேசத்தின் புதிய கோணங்களும் அவர்கள் முன்னால் வந்தது. இதன் காரணமாக அதாவது நபி (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பின் காரணமாக பெருமானாரின் உண்மைப் பேரன்பருடன் விசுவாசம், பற்றுணர்வு மற்றும் அன்பு, உலகத்தின் ஏனைய சொந்தங்களை விட மிகைத்தது. அல்லாஹ் இந்த சான்றோர்கள் மீது ஆயிரக்கணக்கான அருள்களை இறக்குவானாக! மேலும் நம்மையும் காலத்தின் இமாமின் பைஅத்தின் கீழ் வந்த பிறகு இந்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக்குவானாக! தமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக்குவானாக! இதன் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாக்குவானாக!

இப்போது நான் வருவதற்கு முன்பு ஒரு வருத்தத்திற்குரிய செய்தி வந்தது. இதன் முழுமையான விபரம் இன்னும் வரவில்லை. ஜும்ஆவிற்குப் பிறகு கராச்சியின் நாஸிம் உமூரே துலபா மற்றும் அவரது குடும்பம் கராச்சிக்கு சென்றது. இவர் மோட்டார் சைக்கிளில் சென்றார். இவரது குடும்பம் ஒருவேளை வண்டியில் சென்றிருக்கலாம். இவர்கள் மீது துப்பாக்கி சூடு நடந்தது. சஹீதாகி விட்டார். இவர் வாலிபராக இருந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

வண்டியில் சென்ற இவரது தந்தை மற்றும் ஏனைய சொந்தங்கள் காயமடைந்துள்ளனர். அல்லாஹ் சஹீத் மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக! விபரங்கள் வரும் போது முழுமையான நிலவரம் பற்றி தெரிய வரும். காயம் அடைந்தவர் இறை அருளால் ஆபத்திலிருந்து தவிர்ந்து விட்டார்கள். எவ்வாறிருப்பினும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இவர்களை எல்லா விதமான கஷ்டங்களிலிருந்தும் காப்பாற்றுவானாக! முழுமையான நிவாரணம் அளிப்பானாக! இதனைப் போன்று பட்டியாலாவிலிருந்தும் ஒரு சஹாதத்துடைய செய்தி வந்துள்ளது. அல்லாஹ் இந்த சஹீதுகளின் தர்ஜாவை உயர்த்துவானாக! நான் கூறியது போன்று காயம் அடைந்தவர்களுக்காக துஆ செய்யுங்கள். பொதுவாகவே பாகிஸ்தானில் இன்றைய நிலைமைகளுக்காக அதிகமாக துஆ செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் எல்லா விதமான தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக!

இதனைத் தவிர நான் ஒரு ஜனாஸாவையும் தொழ வைப்பேன். ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மர்ஹூம் செய்யது அப்துல் கனி சா சாஹிப் உடைய மனைவி கண்ணியத்திற்குரிய செய்யிதா அமத்துர் ரஹ்மான் சாஹிபா உடையதாகும். மிக நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டு அக்டோபர் 15ம் தேதி மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபி குறைஷி அப்துர் ரஹ்மான் சாஹிபுடைய மகள் ஆவார். மிகவும் நல்ல தொழுகை, நோன்பு போன்றவற்றை கடைபிடிக்கக்கூடிய பொருள் தியாகத்தில் வாய்ப்பினை விட அதிகமாக பங்கு பெறக்கூடிய, மிகவும் பரிவுடன் பழகக்கூடிய, விருந்தோம்பல் செய்யக்கூடிய பெண்மணி ஆவார். எளிமையான பண்பு, தன்னடக்கமாக வாழக்கூடிய பெண் ஆவார். பாகிஸ்தானில் மாநாடுகள் நடைபெற்ற சமயங்களில் 50 விருந்தினர்கள் வரை இவரது வீட்டில் தங்கியிருந்தனர். அவர்கள் அனைவருக்காகவும் லங்கர் கானாவின் ஏற்பாட்டைத் தவிர அவர்களுக்காக கண்டிப்பாக ஏதாவது தயாரிப்பார்கள். எப்போதும் தேனீர் ஏற்பாடு இருந்து வந்தது. சில

நண்பர்களுடைய பிள்ளைகளின் திருமணங்கள் பற்றி தெரிய வந்தால் ஏழ்மையின் காரணமாக எந்தவித ஆபரணங்களும் வாங்க முடியவில்லை என்றால் அவர்களுக்கு தனது ஆபரணங்களில் ஏதாவதை கொடுத்து வந்தார்கள். இதன் காரணமாக இவர்களது ஆபரணங்களும் கொஞ்சம் கொஞ்சமாக தீர்ந்து விட்டன. பிள்ளைகளுக்கு எப்போதும் ஜமாஅத்தின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். இதன் விளைவாக இவர்களது பிள்ளைகள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக்கூடிய வாய்ப்பினை பெற்று வருகிறார்கள். மூஸியாக இருந்தார்கள். 1953-ல் வஸிய்யத் திட்டத்தில் இணையும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

இவர்களது பிள்ளைகளில் இருவர் வக்ஃபே ஸிந்தகி ஆவார். ஒருவர் வக்ஃபே ஜதீதின் முஅல்லிமாக அங்கிருக்கிறார். மற்றொருவர் அப்துல்லாஹ் நதீம் சாஹிப் முதலில் ஸ்பெயினில் இருந்தார். இன்றைய காலத்தில் கராச்சியில் இருக்கிறார். இவரால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. இவர்கள் அனைவருக்கும் பொறுமை மற்றும் தைரியத்தையும், ஊக்கத்தையும் வழங்குவானாக! இவரது பிள்ளைகளுக்கு இவரது நன்மைகளை தொடரச் செய்வதறகான வாய்ப்பினை வழங்குவானாக! இதனைப் போன்று இவரது ஒரு பேரனும் முபல்லிக்காக இருக்கிறார். நஸாரத் இசாத், ரப்வாவில் இன்றைய நாட்களில் பணியாற்றுகின்றார். இதனைப் போன்று இவரது மருமகன் முனீர் ஜாவேது சாஹிப் இங்கு பிரைவேட் பிரிவில் இருக்கிறார். ஆக, இவரது குடும்பத்தில் நான்கு பேர் வக்ஃபே ஸிந்தகியாக இருக்கின்றார்.

அல்லாஹ் பிள்ளைகளைப் பற்றிய இவரது ஆசைகளை நிறைவேற்றுவானாக! இவரது சந்ததிகளை நன்மையில் முன்னேறச் செய்வானாக! மர்ஹூமாவுடைய தர்ஜாவை உயர்த்துவானாக! ஏனைய மகன்,மகளுக்கு தைரியத்தையும் ஊக்கத்தையும் வழங்கவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.
**ON 19.10.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456